# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2019 – 2020

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 11

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:...............................................................

மொத்தப்புள்ளிகள் : 100

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.**

1. பிறமொழிப் பெயர்ச்சொற்களின் ஒலிப்புக்கு ஏற்ப, தமிழ் ஒலிப்பை மாற்ற உதவும் எழுத்து

அ) மெய்யெழுத்து ☐ ஆ) உயிர்மெய்யெழுத்து ☐

இ) உயிரெழுத்து ☐ ஈ) ஆய்த எழுத்து ☐

2. ‘‘ஒட்டேன்! அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்’’ என்று வஞ்சினம் உரைத்தவர்

அ) மாதிரி ☐ ஆ) ஐயை ☐

இ) கண்ணகி ☐ ஈ) மாதவி ☐

3. ஓடிடும் தமிழா! என்ற கவிதையை எழுதியவர்

அ) அம்பி ☐ ஆ) இரவி ☐

இ) காசி ஆனந்தன் ☐ ஈ) உதயை வீரையன் ☐

4. பண்புத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) தேன்மொழி ☐ ஆ) கத்திகோடரி ☐

இ) அறுசுவை ☐ ஈ) விளைபயிர் ☐

5. வீறு என்பது

அ) வீர உணர்வு ☐ ஆ) அச்ச உணர்வு ☐

இ) நகைச்சுவை உணர்வு ☐ ஈ) இரக்க உணர்வு ☐

6. கோவலன் பெண்ணாக உருவகித்துப் பாடியது

அ) பூம்புகாரை ☐ ஆ) மாதவியை ☐

இ) கடற்கரையை ☐ ஈ) காவேரியை ☐

7. யாழ்நூலகக் கட்டிடத்திற்கான வரைபடத்தை வரைந்தவர்

அ) க.மு.செல்லப்பா ☐ ஆ) கே. நரசிம்மன் ☐

இ) வண.தந்தைலோங் அடிகளார் ☐ ஈ) ஐசாக் தம்பையா ☐

8. பின்வருவனவற்றுள் வினாவெழுத்து அல்லாதது

அ) ஏ ☐ ஆ) ஈ ☐

இ) யா ☐ ஈ) ஓ ☐

9. தமிழகத்தின் ஆடல் அரசிக்கான பட்டத்தைப் பெற்றவள்

அ) மாதவி ☐ ஆ) சித்திராபதி ☐

இ) மணிமேகலை ☐ ஈ) மாதரி ☐

10. அல்வழித்தொகை

அ ) நான்கு ☐ ஆ) ஐந்து ☐

இ) ஏழு ☐ ஈ) மூன்று ☐

11. ஏமாற்றி அழிக்கும் செயல் என்பதைக் குறிக்கும் பழமொழி

அ) ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுகிறது. ☐

ஆ) யானைக்கும் அடி சறுக்கும். ☐

இ) கழுதை அறியுமா கற்பூர வாசனை. ☐

ஈ ) சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது. ☐

12. சிலப்பதிகாரக் கதையின் கருப்பொருளாக அமைந்தது

அ) மணிமாலை ☐ ஆ) குண்டலம் ☐

இ) வளையல் ☐ ஈ) சிலம்பு ☐

13. ‘‘கன்றிய கள்வன் கையது ஆகின்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கென’’என்று கூறியவர்

அ) பொற்கொல்லன் ☐ ஆ) நெடுஞ்செழியன் ☐
இ) இளங்கோவடிகள் ☐ ஈ) மாடலன் ☐

14. வான் நிலா. இதில் தொக்கி நிற்கும் உருபு

அ) ஐந்தாம் வேற்றுமை ☐ ஆ) மூன்றாம் வேற்றுமை ☐
இ) நான்காம் வேற்றுமை ☐ ஈ) ஏழாம் வேற்றுமை ☐

15. இலங்கையில் கண்ணகிக்குக் கோவில் கட்டிய மன்னன்

அ) செங்குட்டுவன் ☐ ஆ) கயவாகு ☐
இ) கனகவிசயன் ☐ ஈ) எல்லாளன் ☐

16. **ஔ** என்ற எழுத்தின் இனவெழுத்து

அ) இ ☐ ஆ) <u>ஊ</u> ☐
இ) ஆ ☐ ஈ) <u>உ</u> ☐

17. பின்வருவனவற்றுள் சிறப்புப்பெயருடன் பொதுப்பெயர்

அ) மருத்துவர் மாறன் ☐ ஆ) வாழைக்காய் ☐
இ) சேரன் செங்குட்டுவன் ☐ ஈ) வள்ளல் பாரி ☐

18. யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே ________________ உடலம்
குருதியில் கிடந்தது என நுஃமான் குறிப்பிடுகிறார்.

அ) புத்தரின் ☐ ஆ) அரசகாவலரின் ☐
இ) தமிழரின் ☐ ஈ) சிங்களவரின் ☐

19. இரு சொல் புணரும்போது நிலைமொழியுடன் புணரும் சொல்

அ) வருமொழி ☐ ஆ) தொடர்மொழி ☐

இ) நிலைமொழி ☐ ஈ) இணைமொழி ☐

20. திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றைக் காட்டும் வினைச்சொல்

அ) குறிப்புவினை ☐ ஆ) தெரிநிலைவினை ☐

இ) குறைவினை ☐ ஈ) எச்சவினை ☐

21. கண்ணகியின் சிலம்பில் இருந்தவை

அ) முத்து ☐ ஆ) மாணிக்கம் ☐

இ) வைரம் ☐ ஈ) பவளம் ☐

22. ஆகா! இவ்வயல்வெளி எவ்வளவு பசுமையாக இருக்கிறது. இச் சொல்லியம்

அ) கூற்று ☐ ஆ) வினா ☐

இ) ஏவல் ☐ ஈ) வியப்பு ☐

23. யாழ்நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டு

அ) 1933 ☐ ஆ) 1981 ☐

இ) 1954 ☐ ஈ) 1959 ☐

24. ஆடற்குல ஆண்கள்

அ) கூத்தர் ☐ ஆ) விறலியர் ☐

இ) பாடினியர் ☐ ஈ) இடையர் ☐

25. ஓர் இனத்தின் அடையாளத்தைக் காட்டுவது

அ) கல்வி ☐ ஆ) பணம் ☐

இ) மொழி ☐ ஈ) செல்வம் ☐

26. செயப்படுபொருள் குன்றாவினைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நட ☐ ஆ) வா ☐

இ) அழு ☐ ஈ) எழுது ☐

27. படர்க்கை இடத்திற்குரிய பன்மைச் சொல்

அ) ஓடினர் ☐ ஆ) ஓடினாய் ☐

இ) ஓடுவீர் ☐ ஈ) ஓடுகிறான் ☐

28. இறந்தகாலப் பெயரெச்சம்

அ) கட்டும் ☐ ஆ) கட்டுகின்ற ☐

இ) கட்டிய ☐ ஈ) கட்டினேன் ☐

29. இரவி என்ற கவிஞர் எழுதிய கவிதையின் தலைப்பு

அ) இனியும் ☐ ஆ) மானிடாசொல் ☐

இ) ஓங்கு புகழ் கற்கள் ☐ ஈ) ஓடிடும் தமிழா ☐

30. சுடுசோறு என்பது

அ) பண்புத்தொகை ☐ ஆ) உம்மைத்தொகை ☐

இ) உவமைத்தொகை ☐ ஈ) வினைத்தொகை ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக அமைக்கப்படுவது கலங்கரை விளக்கம். உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளிவீசும் விளக்கினைக் கொண்டதாக இது அமைக்கப்படும். கலம் என்றால் கப்பல். கரைதல் என்றால் அழைத்தல். கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளில் இது கலங்கரை விளக்கம் எனப்பட்டது. துறைமுகப் பக்கம் ஆழமற்ற கடல் என்பதால் பெருங்கப்பல்கள் கரைக்கு வருவதில்லை. அவை ஆழ்கடலிலே தான் நங்கூரம் இட்டுத் தங்கி நிற்கும். எனவே, கப்பலில் இருந்து வரும் பொருட்களை வள்ளங்கள் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர். (கலம் தந்த பொற்பரிசம் பாடல் 343) இச்செய்தி புறநானூற்றில் கூறப்பட்டிருக்கிறது. அத்தோடு முற்காலத்தில் போர் புரியவே கப்பல்கள் பெரிதும் பயன்பட்டன. ஆனால், இக்காலத்தில் பெரும்பாலும் பொருட்களை ஏற்றிச் செல்வதற்கே கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைச் சரக்குக் கப்பல்கள் என்பர். போருக்குப் பயன்படும் பெரியகப்பல்கள் இன்றும் உள்ளன. இவ்வாறு சீர்மிகு கப்பற்கலையில் நம் முன்னோர் சிறந்து விளங்கினர் என்பதைப் பழம்பெரும் இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம். இது நமக்குப் பெருமை அளிக்கும் செய்தியாகும்.

1. முற்காலத்தில் எதற்காகக் கப்பல்கள் பெரிதும் பயன்பட்டன?

________________________________________

________________________________________

2. நம் முன்னோர் எதில் சிறந்து விளங்கினர்?

________________________________________

________________________________________

3. ஏன் பெருங்கப்பல்கள் கரைக்கு வருவதில்லை?

________________________________________

________________________________________

4. கலங்கரை விளக்கத்தின் பொருள் என்ன?

________________________________________

________________________________________

5. கப்பலில் இருந்து வரும் பொருட்களை எவற்றின் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர்?

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. வான்கண் விழியா வைகறை யாமத்தில் புகாரைவிட்டு நீங்கியவர்கள் யாவர்?

___

___

2. என் தமிழர் கணக்கின் வண்ணம் நடுகல்லே மிக உயர்ந்தது எனக் கூறிய கவிஞர் யார்?

___

___

3. தமிழீழ மாணவர்களுக்கு மாறாத வலியையும் ஆறாத துயரையும் கொடுத்து, கல்வியில் பாதிப்பை ஏற்படுத்திய நிகழ்வு எது?

___

___

4. குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர். இப்பழமொழியின் பொருள் யாது?

___

___

5. கண்ணகி விண்ணுலகம் அடைந்த நாட்டின் பெயர் என்ன?

___


___

6. தீக்குறிகளைக் கண்ட மாதரி, ஆயர் குல மங்கையரை அழைத்து ஆடுவித்த கூத்தின் பெயரைத் தருக.

___

___

7. தரப்பட்டுள்ள ( ஈழம் ) வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களை எழுதுக.




அ) ______________________

ஆ) ______________________

இ) ______________________

ஈ) ______________________

புள்ளிகள் 10

4. பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.



அடிமை வாழ்வு கண்ணீரில் எழுதப்பட்டது
தமிழனின் வாழ்வோ குருதியில் எழுதப்பட்டது

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு எடுத்துக்காட்டுத் தருக.

அ) தனிமொழி ____________________

ஆ) தொடர்மொழி ____________________

இ) பொதுமொழி ____________________

2. சொற்பொருள் தருக.

மாற்றான் ________________ ஈட்டிய ________________

தேராது ________________ பூவனம் ________________

பகர்தல் ________________ கற்பம் ________________

3. வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு சொல்லியம் எழுதுக.

அ) மூன்றாம் வேற்றுமை ________________________________

ஆ) ஆறாம் வேற்றுமை ________________________________

இ) ஐந்தாம் வேற்றுமை ________________________________

4. பின்வருவன எவ்வகை மரபுத்தொடர்கள் எனக் கண்டறிந்து எழுதுக.

வெட்டவெளி ________________________

பட்டிதொட்டி ________________________

கேட்கக்கேட்க ________________________

5. புணர்த்தி எழுதுக.

விளா + கனி ________________ மணி + ஒலி ________________

கல் + தாழை ________________ முள் + செடி ________________

களம் + ஆடு ________________ புல் + தரை ________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

அறிவியல் ஆய்வுக்கு எல்லை இல்லை. மண்ணில், விண்ணில், கடலில், காற்றில் என எங்கும் ஆய்வு நிகழ்கிறது. மாந்தனின் உருவமாக எந்திர மாந்தனை மாந்தரே உருவாக்குகின்றனர். மாந்த உடலின் உறுப்புகளைப்போல எந்திரமாந்தனின் பாகங்களை உருவாக்குகின்றனர். வானில் உலா வரும் கோள்கள் இனி எமக்குத் தொலைவில் இல்லை. நேற்றைய மாந்தன் நினைத்துப் பார்க்காத பலவற்றை இன்றைய மாந்தன் நிகழ்த்திக் காட்டுகிறான். மாந்தன் ஆழ்கடலுக்குள்ளேயும் சென்று ஆய்வுகள் செய்கிறான். நீல வானத்தின் மேல் பறந்து நிலவில் சென்றும் வாழ நினைக்கிறான். வானத்தில் செலுத்தப்படும் செயற்கைக் கோள்களின் உதவியுடன் செய்தித் தொடர்பில் சிறந்துள்ளான். இயற்கை வளங்களையும் புயல், மழை ஆகியவற்றையும் கண்டறிந்து கூறுகிறான். எலும்பும் தசையும் இல்லாமல் செயற்படும் எந்திர மாந்தனையும் படைத்துவிட்டான். இணைய வலையின் உதவியால் உலகத்தையே நம் உள்ளங்கையில் கொடுக்கிறான். நாளைய மாந்தன் விண்ணிலுள்ள கோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான். என்னே! மாந்தனின் அறிவியல் வளர்ச்சி

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ யாழ் நூலகம்

- ✸ ஊடகங்களின் வளர்ச்சியும் அவற்றினால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்

- ✸ மாவீரர்நாளும் நடுகல் வழிபாடும்

புள்ளிகள் 20